21st March 1964]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கம் அப்படி ஒன்றும் உத்தரவு போடவில்லை. ஆனால் நிலைமைக்குத் தக்கவாறு, உசிதம் போல நடந்துகொள்ள போலீசாருக்கு உரிமை உண்டு.

மேல்மட்ட நீர்த்தொட்டி, சுத்தமல்லி (திருநெல்வேலி தாலூகா)

***347** கேள்வி.—**திரு ஆர். எஸ். ஆறுமுகம் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி தாலூகா, சுத்தமல்லியில் கட்டப்பட்டுள்ள ஓவர் ஹெட்டாங்க் கட்டப்பட்டு இரண்டாண்டுகள் ஆகியும் இன்னும் திறக்கப் படவில்லை என்பது உண்மையா ?

(இ) அப்படியானல் அதற்குக் காரணமென்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) ஆம். மின்சார இணைப்புக் கொடுக்காததால் மேல்மட்ட நீர்த்தொட்டியைப் பயன்படுத்த முடியவில்லை. மேற்படி மேல்மட்ட நீர்த்தொட்டிக்கு மின்சார இணைப்புக் கொடுப்பதற்கான விசேஷ உயரிய உத்தரவாதத் தொகையைச் செலுத்து வதாக அப்பகுதி பஞ்சாயத்து தெரிவித்திருப்பதால், தமிழ்நாடு மின்சார போர்டு தலைமை வினியோக இஞ்சினியர், திருநெல்வேலி மின்சார ஏற் பாட்டின் மேற்பார்வை என்ஜினியருக்கு இதற்கு மின்சார இணைப்புக் கொடுக்கும்படி சமீபத்தில் ஆணை பிறப்பித்துள்ளார்.

Selection of District Munsifs

* 348 *Q.*—SRI K. CHEEMAICHAMY : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there was any recruitment to the post of District Munsif during 1963–64; and

(*b*) if so, the total number of candidates selected?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் :

(அ) ஆம்.

(இ) 11.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்தத் தேர்வில் டிஸ்ட்ரிக்ட் முன்சீப்புகள் மாவட்டவாரியாக எத்தனை பேர்கள் தேர்ந் தெடுக்கப்பட்டார்கள் என்று கூற முடியுமா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : மாவட்ட வாரியாகக் கூறுவதற்கு தகவல் இல்லை.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, 11 முன்சீப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்றால், அதில் எத்தனை பேர்கள் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுகளாக இருந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்று அறிவிக்க முடியுமா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : அப்படி தனிக் கணக்கு இல்லை.

இந்தியப் பிரதமரின் மதுரை விஜயம்

***349** கேள்வி.—**திரு. சா. கணேசன் :** கனம் முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963–ம் ஆண்டு டிசம்பரில் இந்தியப் பிரதமரின் மதுரை மாவட்ட விஜயத்தின்போது மதுரை ஜில்லா சுதந்திரக் கட்சித் தலைவர் திரு. எல். கே. பி. லட்சுமணன் அவர்களைக் கைது செய்தமைக்குக் காரணமென்ன ?